திருவள்ளூர் மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) (உபதுத நிலையில்) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திருமதி.இ.இந்திரா, பி.ஏ., பி.எல்.,

செ.மு.ஆணை எண்.2829/ஈ2/2026, நாள்.22.04.2026

பொருள்: மதிப்புநிர்ணயம்– **பொன்னேரி சார்பதிவகம் – நிலுவை ஆவண எண்.P447/2026–** தாங்கல்பெரும்புலம் கிராமம்– சர்வே எண்கள்.95/1B, 95/2, 96/83 மற்றும் 192/1B–ல் மொத்த விஸ்தீரணம் 25666சமீ (6.35 ஏக்கர்)–ல் அமைந்துள்ள "கோமதி அம்மன் நகர் பேஸ்–I" என்ற மனைப்பிரிவிற்கு மதிப்பு நிர்ணயம் செய்வது – தொடர்பாக

பார்வை: 1) வணிகவரி மற்றும் பதிவு(ஜே1)த்துறை, அரசாணை (நிலை) எண்.27, நாள்.16.03.2023

2) பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களின் ஆணை எண்.3321/L1/2014 (சுற்றறிக்கை எண் 1/2014) நாள்.27.01.2014

3) உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருவள்ளூர் அவர்களின் ROC No.SWP/JNAMWM2S/TVL/2025/2025/TCP நாள்.09.12.2025–ன் படி அளிக்கப்பட்ட [அங்கீகார எண்.SWP/DTCP/TVLR/LAYOUT No.169/2025]

4) தாங்கல்பெரும்புலம் ஊராட்சி மன்றத்தின் செயல்முறைகள் Roc.No.02/2025–26, நாள்.16.02.2026

5) சார்பதிவாளர், **பொன்னேரி** ந.க.எண்.97/2026, நாள்.07.04.2026. கடிதம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.16.04.2026

****

ஆணை:–

திருவள்ளூர் பதிவு மாவட்டம், பொன்னேரி சார்பதிவகம், நிலுவை ஆவண எண்.P447/2026, தாங்கல்பெரும்புலம் கிராமம், சர்வே எண்கள்.95/1B, 95/2, 96/83 மற்றும் 192/1B–ல் மொத்த விஸ்தீரணம் 25666சமீ (6.35 ஏக்கர்)–ல் அமைந்துள்ள "கோமதி அம்மன் நகர் பேஸ்–I" என்ற மனைப்பிரிவிற்கு மனை மதிப்பு நிர்ணயம் செய்ய பார்வை(5)–ன் வழி பெறப்பட்ட கருத்துரு பரிசீலிக்கப்பட்டது.

பார்வை(3)–ல் காணும் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருவள்ளூர் அவர்களின் அங்கீகார ஆணையின் படி தொழிற்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை(4)–ல் காணும் தாங்கல்பெரும்புலம் ஊராட்சி மன்றத்தின் செயல்முறைகளின் படி மேற்படி மனைகளுக்கு இறுதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு மதிப்பு நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆவணச் சொத்து நேரில் ஆய்வு செய்யப்பட்டதன்

அடிப்படையிலும், தொடர்புடைய சான்றாவணங்கள், பதிவுப்புள்ளி விபரங்கள், சுற்றியுள்ள புல எண்களின் மதிப்பு, விசாரணை மதிப்பு, சார்பதிவாளரின் பரிந்துரை ஆகியவை பரிசீலிக்கப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வகைப்பாட்டில் மதிப்பு நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

ஆவண எண்	நிலுவை ஆவண எண்.P447/2026	
கிராமம்	தாங்கல்பெரும்புலம் கிராமம்	
சர்வே எண் மற்றும் விஸ்தீரணம்	சர்வே எண்கள்.95/1B, 95/2, 96/83 மற்றும் 192/1B-ல் மொத்த விஸ்தீரணம் 25666சமீ (6.35 ஏக்கர்)	
மனைப்பிரிவின் பெயர்	கோமதி அம்மன் நகர் பேஸ்-I	
நிர்ணயம் செய்யப்படும் மதிப்பு / வகைபாடு	மதிப்பு	ரூ.200/சதுரடி
	புதிய வகைபாடு	குடியிருப்புப்பகுதி தரம்-I வகை-II (RCI-II)

பார்வை(5)ல் காணும் பொன்னேரி சார்பதிவாளர் அறிக்கையில் கண்டுள்ள வில்லங்கச்சான்று, வழிகாட்டி மதிப்பு மற்றும் இணைக்கப்பட்டுள்ள புல வரைபடம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இம்மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்கண்ட அறிக்கையில் வில்லங்கச்சான்று, வழிகாட்டி மதிப்பு, கிராம வரைபடம், FMB ஆகியவற்றில் ஏதேனும் விடல்கள் இருப்பின் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு சார்பதிவாளரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும், வழிகாட்டி மதிப்பு சீரமைத்த இனங்கள் இடம் பெற்றுள்ளதா என்பதை பரிசீலித்திடாமல் அனுப்புவதற்கும் சார்பதிவாளரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சர்வே எண்ணுக்கு ஆவணத்தாக்கலின் போது மேற்கண்ட மதிப்பினை காட்டிலும் உயர் மதிப்பில் ஆவணமேதும் பதிவு செய்யப்பட்டிருப்பின் அம்மதிப்பினை கடைபிடிக்குமாறு சார்பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களின் கடித எண்.14441/சி1/2018, நாள்.16.12.2021 மற்றும் பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.29945/சி1/2015, நாள்.25.10.2018 ஆகியவற்றினை பின்பற்றிட சார்பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறது. **மேலும் பிரஸ்தாப புல எண்ணை உள்ளடக்கிய புல எண்கள் அரசு புறம்போக்கு நிலங்கள் / அனாதீனம் / வக்போர்டு வாரிய சொத்துக்கள் /சதுப்பு நிலங்கள் / வனப்பகுதி / இந்து சமய அறநிலையத்துறை சொத்துக்கள் அல்ல என்பதையும், நிபந்தனையுடன் அளிக்கப்பட்ட பட்டா நிலமல்லா என்பதையும் மற்றும் பதிவு மேற்கொள்ள நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்ட சொத்து அல்ல என்பதையும் உறுதி செய்து கொள்ள சார்பதிவாளருக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஆவணப்பதிவு மேற்கொள்ளும் போது 1908-ம் ஆண்டு பதிவுச்சட்டத்தின் பிரிவு 22(A) மற்றும் (B)-ன் படி செயல்படுமாறு சார்பதிவாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.**

இவ்வாணைப்படி வித்தியாசப்படும் மதிப்பிற்கு குறைவு முத்திரைத்தீர்வை மற்றும் குறைவு பதிவுக்கட்டணம் வசூலிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ள சார்பதிவாளருக்கு அறிவிக்கப்படுகிறது. மேலும் நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பினை ஆவணதாரர் ஏற்று மேல்முறையீடு ஏதும் அளிக்காதபட்சத்தில் தவறாது இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவிக்கப்படுகிறது. மேலும் மேற்படி, பொன்னேரி சார்பதிவகம், நிலுவை ஆவண எண்.P447/2026, தாங்கல்பெரும்புலம் கிராமம், சர்வே எண்கள்.95/1B, 95/2, 96/83 மற்றும் 192/1B-ல் மொத்த விஸ்தீரணம் 25666சமீ (6.35 ஏக்கர்)-ல் அமைந்துள்ள "கோமதி அம்மன் நகர் பேஸ்-I" என்ற மனைப்பிரிவிற்கு சதுரடி ஒன்றுக்கு ரூ.200/- குடியிருப்புப்பகுதி தரம்-I வகை-II (RCI-II) என நிர்ணயம் செய்த மதிப்பினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டற்கான ஒப்புதல் இணையதள வழிகாட்டி மதிப்பின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு சார்பதிவாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மதிப்புநிர்ணயம் குறித்து ஆட்சேபணை ஏதுமிருப்பின் துணைப்பதிவுத்துறைத்தலைவர், சென்னை-35 என்ற முகவரிக்கு 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

22/4

மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்),
திருவள்ளூர்

22/4/26

பெறுநர்:
சார்பதிவாளர்,
பொன்னேரி

நகல்:
1. மாவட்டப்பதிவாளர் (தணிக்கை), திருவள்ளூர்
2. ஆவணதாரர் (சார்பதிவாளர் மூலம்)
3. முக்கிய ஆவணக் கோப்பு